**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**HMOP No: 92/2022 ராஜகோபால் (மசா1) தேதி: 17.02.2026..**

**மசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது நிருபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் தொடர்ந்து மருந்துகள் உட்கொள்வது நிரந்தரமானது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதை நிருபணம் செய்ய மருத்துவ சான்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறியுள்ள விபரம் உண்மையானது இல்லை என்பதால் தான் என்னால் நீதிமன்றத்தில் அது குறித்து ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் சக்தி வாய்நத் மருந்துகளை உபயோகப்படுத்தி வந்ததாகவும், அந்த விபரத்தை என்னிடம் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் அவ்வாறு சக்தி வாய்நத் மருந்துகளை உபயோகப்படுத்தி வந்தது சம்பந்தமான நான் ஆவணங்கள் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் மருந்து சீட்டு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அந்த மருந்து சீட்டு அடி,ப்படையில் அது சக்தி வாய்நத் மருந்து என கூற முடியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் சக்தி வாய்ந்த மருந்து எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் குழந்தையை பெற்று எடுத்தல் இந்து திருமணத்தின் முக்கிய நோக்கம் என எந்த அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. குழந்தையை பெற்று எடுத்தல் முடியாத சூல்நிலையில் அதுவே விவாகரத்து கோர போதுமானது என எந்த அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. இந்து திருமண சட்டத்தில் குழந்தை பெற்று எடுத்தல் கட்டாயம் என்றோ குழந்தை பெற்று எடுக்க முடியாவிட்டால் அது விவாகரத்து வழங்க ஒரு காரணம் என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எதிர்மனுதாரர் மருந்து மாத்திரை உட்கொள்வது வழக்கம் என்ற விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எதிர்மனுதாரரின் தந்தை என்னிடம் கூறினார். எதிர்மனுதாரரின் தந்தை அவ்வாறு என்னிடம் எந்தவிபரமும் கூறவில்லை என்றால்

சரியல்ல. எதிர்மனுதாரரின் தந்தை என்னிடம் மேற்படி விபரத்தை கூறினார் என்பதற்கு நான் ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரை அவரது தந்தை அழைத்து சென்ற பின்னர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எனது பெற்றோர்கள் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்தார்களா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்ற விபரத்தை சொல்லாமல் திருமணம் செய்து வைத்ததால் எனது பெற்றோர்கள் சேர்ந்து வாழ நடவடிக்கை ஏதுவிம் எடுக்கவில்லை. எனது சகோதரியும், எதிர்மனுதாரரும் ஒரே பள்ளியில் படித்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது சகோதரி கோவில்பட்டி கே.ஆர்.ஏ பள்ளியில் படித்தார். எதிர்மனுதாரரும் கோவில்பட்டி கே.ஆர்.ஏ பள்ளியில் படித்தார் என்றாலும் அவர்கள் இருவரும் ஒரே பேருந்தில் தான் பள்ளிக்கு சென்றார்கள் என்றாலும் எனக்கு தெரியவில்லை. இந்த விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிர்மனுதாரருக்கு காரணங்களை கூறி அறிவிப்பு ஏதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் கூறியுள்ள விபரங்கள் பொய்யானவை என்பதால் தான் நான் அறிவிப்பு ஏதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் நோய் சம்பந்தமாக நான் எந்த மருத்துவரை அனுகி உறுதி செய்தேன் என்றால் நான் மருத்துவர் யாரையும் பார்க்கவில்லை. நான் கூறுவது உண்மை இல்லை என்பதால் தான் எந்த மருத்துவரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் விவாகரத்திற்காக கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் சுத்த பொய் என்றாலும் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் இன்றளவும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் என்னுடன் சேர்ந்து வாழ பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும், எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை:</u> இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.